1987 நவம்பர் 12]

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிண்டியில் பார்வை அற்றவர்களுக்காக இயங்கி வந்த எளிய பொறியியல் பயிற்சி திட்டம் 1982-லிருந்து பார்வை அற்றோர் தொழிற்பயிற்சி நிலையமாக உயர்த்தப்பட்டு கீழ்க்கண்ட பயிற்சிகள் வழங்கப்பட்டுவருகின்றன. அதிலே, பொருத்துநர் மற்றும் அடிப்படை இயந்திர இயக்குநர், ஓராண்டு காலப்பயிற்சி, புத்தகம் கட்டுபவர் ஓராண்டு காலப் பயிற்சி, மின்கம்பி சுற்றுபவர் 6 மாத காலப் பயிற்சி என்று தற்போது வழங்கப்பட்டு வருகிறது. அதோடுமட்டுமல்லாமல், கிண்டி தொழில் பயிற்சி நிலையத்தில் 1984 ஆம் ஆண்டு முதல் காது கேளாத 16 நபர்களுக்கு 2 ஆண்டுகள் பொருத்துநர் பிரிவில் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. மேற்படி கிண்டி தொழில் பயிற்சி நிலையத்தில் இடைநிலைப் பிரிவு ஒன்றும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

தா. பழூர் ஒன்றியத்தில் புதிதாக சத்துணவு மையம்

73—*(வினா எண் 11274)— டாக்டர் ந. மாசிலாமணி : மாண்புமிகு சத்துணவு, சமூகநலம் மற்றும்கதர்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஜெயங்கொண்டம் தொகுதி, தா. பழூர் ஒன்றியத்தில் அம்பலவர் கட்டளை, ஆலவாய், கார்குடி, அமிர்தராசன் கோட்டை, படுக்கல், அண்ணங்கான் பேட்டை ஆகிய கிராமங்களுக்கு புதியாக சத்துணவு மையம் துவங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை.

கரந்தமலையூரில் சத்துணவு திட்ட மையம்.

74— *(வினா எண் 11821)— திரு. மெ. ஆண்டி அம்பலம்: மாண்புமிகு சத்துணவு, சமூகநலம், மற்றும் கதர்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அண்ணா மாவட்டம், நத்தம் தொகுதி, குட்டுப்பட்டி பஞ்சாயத்து கரந்தமலையூரில் சத்துணவு திட்ட மையம் அமைத்துத் தரும் திட்டம் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை.

திரு. மெ. ஆண்டி அம்பலம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கு மலையூர், புதூர், வலசை ஆகிய 3 ஊர்களும் மலை உச்சியில் இருக்கின்றன. நூறு குழந்தைகளுக்கு

மேலே மலைக்கிழங்குகளை கெள்ளி சாப்பிட்டுவிட்டுப் போகக் கூடிய சூழ்நிலை இருக்கிறது. ஆகவே இந்த ஆண்டு உடனே அந்த சத்துணவுக் கூடத்தை திறப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முயல்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். : சௌந்திரராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்துணவுக் கூடம் குழந்தைகளுக்காக ஆரம்பிக்கவேண்டுமென்று சொல்கின்றபோது, அங்கே 70-லிருந்து 150 குழந்தைகள் வரையில் இருக்க வேண்டும். சத்துணவுக் கூடம் புதியதாக வேண்டுமென்று வருகிறபோது அந்த குறிப்புகள் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு அனுப்பப் படுகிறது. மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அதை ஆய்வு செய்து, அங்கே எவ்வளவு குழந்தைகள் இருக்கிறார்கள் என்பதை அறிவித்த பிறகு அத்தகைய சத்துணவுக் கூடங்கள் தொடங்கப் படுகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட கேள்விக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடமிருந்து எந்தவிதமான அறிக்கையும் வரப்பெறவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

உடல் ஊனமுற்றோர்கள் கழக பேருந்துகளில் பயணம் செய்ய இலவச பாஸ்

75—*(வினா எண் 13413)— திரு. சைதை சா. துரைசாமி மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்) : திரு. கே. உசி மற்றும் திரு. ஆண்டி அம்பலம்: மாண்புமிகு சத்துணவு, சமூகநலம் மற்றும் கதர்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

உடல் ஊனமுற்றவர்கள் தமிழ்நாடு போக்குவரத்துக் கழக பேருந்துகளில் பயணம் செய்ய இலவச பாஸ் வழங்கும் செயல் குறிப்பு அரசிடம் உள்ளதா?

மசண்புமிகு திரு. ஆா. சௌந்திரராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றப் பேரவை முன் விவர அறிக்கை ஒன்று தனியாக வைக்கப்பட்டுள்ளது.

அறிக்கை.

தமிழ்நாட்டிலுள்ள கண் பார்வையற்றவர்கள், வயது வரம்பின்றி, திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் தவிர அனைத்து போக்குவரத்துக் கழகங்களின் பேருந்துகளிலும் சிகிச்சை பெற மருத்துவ மனைக்கும், பள்ளிக்கும் பிற பயணங்கள் மேற்கொள்வதற்கும் இலவச பயணச் சலுகை வழங்கப்பட்டு வருகின்றது.